# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 08.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 17129/F/2024 & SA 17146/F/2024**

திரு.R.சுரேஷ் குமார் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(மதுரை) லிமிடெட்,
திண்டுக்கல் மண்டலம்,
திண்டுக்கல்-624 004. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 08.07.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.R.சுரேஷ் குமார் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திருமதி.T.சித்ராதேவி, உதவி மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல் அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 12.08.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், DINDUGUL UNIT-II BRANCH 16.01.2024 520-A TICKET BOOK MAIN SHEET WITH 3 INVOICE COPY XEROX என்பன போன்ற 4 இனங்களில் தகவல்களை கோரியுள்ளார்.

3. அதனைப்பெற்ற பொதுதகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை என மனுதாரர் தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 19(1)ன் கீழான 16.09.2024 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னர் பொதுத்தகவல் அலுவலர் 16.11.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கவில்லை. இந்நிலையில் மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 06.12.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு

மனுக்களை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (08.07.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர், மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு 16.11.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியிருப்பதாகவும் மேலும் தற்போது நேரடியாக மனுதாரருக்கு தகவல் கொடுப்பதாகவும் கூறி ஆணையத்தின் முன் மனுதாரருக்கு நேரடியாக ஆவணங்களை வழங்கினார். அதனைப்பெற்ற மனுதாரர் சில இனங்களுக்கு தகவல்களை பெற்றுத்தருமாறு கூறினார்.

5. இவ்வாணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் ஏற்புடையது அல்ல எனக்கருதி இவ்வாணையம் கீழ்கண்ட உத்தரவை பிறப்பிக்கிறது.

**“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள 12.08.2024 நாளிட்ட மனுவில் கோரியுள்ள இனம் 2 மற்றும் 3-க்கு சரியான முழுமையான தகவலை, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி வழங்கப்படுகிறது என்ற முத்திரையுடன் பொதுத்தகவல் அலுவலர் சான்றொப்பமிட்டு மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவல் ஆகியவற்றை இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் 19.08.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு இவ்வாணையம் ஆணையிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**
(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 17129/F/2024 & SA 17146/F/2024**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

பொதுத்தகவல் அலுவலர் /
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(மதுரை) லிமிடெட்,
திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல்-624 004.

**<u>மனுதாரர்</u>**
திரு.R.சுரேஷ்குமார்,
த/பெ P.ராஜேந்திரன்,
No.2-29. வடக்குத் தெரு,
பள்ளப்பட்டி,
திண்டுக்கல்-624201.

Copy to file: KR/PA